# நானுஜீவவாதக்கட்டவிளச்

# செய்யுள்

இஃது

ஸ்ரீ சங்கர கிங்கர சரணசேகரன்

சிவாநந்தன் பாடியது.

தஞ்சை

ஸ்ரீ வித்தியாவிநோதினி முத்திராசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது

உ

ஸ்ரீஜகதாசார்யேப்யோ நம:

# நானாஜீவவாதக்கட்டளைச் செய்யுள்.

இஃது

ஸ்ரீசங்கரகிங்கரசரணசேகரன்

சிவாநந்தன் பாடியது.

MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY THANJAVUR. 23 MAR 1982 THE THANJAVUR

தஞ்சை

வி. கோவிந்தன் அண்டு பிரதர்ஸ் அவர்களால்

தமது

"ஸ்ரீ வித்தியாவிநோதினி முத்திராசாலையில்"

பதிப்பிக்கப்பட்டது.

SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY TANJORE

(Copy-Right Registered.)

1912.

ஸ்ரீ பகவத்பாதாசார்யேப்யோ நம:

# நாஞ்ஜீவவாதக்கட்டளைச் செய்யுள்.

## காப்பு மங்களம்.

உலகம்யாவினுமுள்ளும்புறம்புமா
யிலகுசோதியெதுவெதியாவர்க்கு
மலகிலானந்தமாவதவ்வாத்தும
நலமிகுந்தெய்வ நற்பதநாடுவாம். (1)

நீர்கொள்செஞ்சடைநின்மலனீன்றருள்
ஏர்கொள்வித்தகயானையையேத்துவாம்
பேர்கொள்சேடாத்திரிசிவன்பேசிய
சீர்கொள்கட்டளையைச்செய்யுள்செய்யவே. (2)

தருவினீழறமக்கிடமாக்கொளு
மருமைசேர்துறவாளருக்கன்றியிப்
பெருமைசால்பொருட்பேசிடவில்லையென்
றருளல்போல்வடம்வாழ்வரெம்மாள்வரே. (3)

பண்டுமின்றும்பரம்பொருளாயநீ
மண்டுவன்மயலான்மனம்வாடலென்
விண்டுநற்சுகமேமவுவீபற்செனும்
விண்டுநற்பதமேவநெஞ்சமே. (4)

தூய்யநல்லறிவாளர்சுரர்தொழு
தையஞானமருளுகவென்னவங்
கையிலாமலகம்மெனக்காட்டிய
செய்யன்வேதன்றிருப்பதஞ்சிந்திப்பாம். (5)

இட்டம்யாவுமிகந்துபசாந்தத்தைக்
கிட்டயாவருங்கேட்குமிராமற்குத்
துட்டமாயைதொலைந்திடச்சொன்னவ
சிட்டனுண்மலர்ச்சேவடிசென்னியே. (6)

முத்தியென்னுமுழுமதிநன்முக
நித்திலநகைநேரிழைநேர்படத்
தத்தில்சாலிதனயனென்மாமுனிச்
சத்திபாதந்தலைக்கணியாக்குவாம். (7)

உரமடைந்துள்ளிருளொழிந்தோதுமுச்
சுரமொழிந்துசுகமெய்தத்தூய்மையார்
நரர்கள்யாவர்க்குநன்கருள்நம்பரா
சரனற்றுண்மலர்சந்ததஞ்சாருவாம். (8)

நாதனம்பவமாகுநல்கூர்விறப்
போதவானந்தப்பூரிசெய்புண்ணியன்
வேதநான்கும்விரித்தவன்வேதவி
யாதன்பாதங்கள்யாமகத்துன்னுவாம். (9)

அகமதென்னுமநுபவமங்கைசேர்
தகுநல்லாமலகம்மெனத்தந்திடு
சகமலந்தவிர்சத்துவன்வித்தகன்
சுகன்மலர்ப்பதந்தோந்தபச்சிந்திப்பாம். (10)

வேதநான்குரைமெய்மைவிளங்கிட
மாதர்மாண்டூகமாநிகமாந்தக்குக்
காதலோடுநற்காரிகைகாண்கௌட
பாதன்பாதங்கள்பந்தறப்பாடுவாம். (11)

# நாஞசீவவாதக்கட்டளைச்செய்யுள்.

பந்தமாகும்பவக்கடனீந்திநாம்
அந்தமாதியுமில்லாவகண்டவா
னந்தவீடுறநல்கிடுஞானகோ
விந்தயோகிவிரைமலர்ப்பாதமே. (12)

திங்கள்சூடியசெஞ்சடைத்தேவனே
இங்கெழுந்தனனின்பெமக்கீயவே
சங்கரப்பெயர்சார்த்தியத்தேசிகப்
புங்கவன்றிருப்பொன்னடிபோற்றுவாம். (13)

அதுவிதுவெனுமல்லலொழித்துவா
விதுவைமானவிளக்கிநம்புந்தியைக்
கதுமெனக்கதிகாட்டிங்கருணைசேர்
பதுமபாதன்பதுமநற்பாதமே. (14)

நாமரூபங்களாகுமிஞ்ஞாலந்தான்
ஏமமின்றியிலங்கிழையில்லைப்போல்
நீமமார்பரநீத்திலையென்னுமத்
தாமலகன்சரண்டலைக்கொள்ளுவாம். (15)

ஓடதிமண்ணுதித்தொடுங்காறுபோல்
ஈடதில்பொருணின்றிந்தயாவையும்
நீடவந்திலயித்திடும்நீயதென்
றோடகன்கழறோத்திரஞ்செய்குவாம். (16)

ஆர்த்திகள்கெடுத்தானந்தம்யாவரும்
பூர்த்தியாகப்புசித்திடப்பூமிசை
தீர்த்தர்போற்றத்திருவுருக்கொண்டவவ்
வார்த்திகன்மலர்ப்பாதநம்மத்தகம். (17)

உலகெலாம்புகழுத்தமாமிந்த
இலகுசங்கரன் றன்வழியேவந்த
அலகின்மேன்மையடியவர்யாவரப்
புலவர்பாதமலர்களைப்போற்றுவாம். (18)

கணபதியாய்க்கந்தனுய்க்கைலாயபதியாகிக்கௌரியாகி
மணநிறைதாமரையில்வளர்மறையவனுய்மாலாகிமற்றுமுள்ள
கணங்களாய்க்காண்பவனுய்க்காட்சியாய்க்காண்பொருளாய்க்கருதுமெல்லாக்
குணங்களாய்க் குணங்கடந்தகுருவான சுந்தரனைக்குறித்துவாழ்வாம். (19)

வருணனைப்போற்றவத்திஞன்மறைப்பொருளை யுணர்கதவமடிவிலாத
பொருணினைகவெனப் பலகாற்புகன்றென்னை வருத்தாமற்புகுந்தபோதே
கருணையிஞற்கோசமைந்துங் கடந்தகரிநீபிரமம் கவலேலென்றுந்
தெருணிரம்பவெனக் குரைத்த தேசிகோத்தம சிவத்தைச்சிந்தைசெய்வாம்.

## அவையடக்கம்.

சீதமோங்கு சேடாத்திரிசிவன் றருதிகழுநாஞசீவ
வாதமாகுமிநூல்வசனந்தனைவழங்குககவியாலென்
ரோதமேலவருரைத்தன னியன் றவாவுணர்விலேனுயர்ந்தோர்கள்
கோதெலாமொரீஇ இக்குணமதாய்க்கொள்ளுவர்கூறலென்னியல்பாமே. (21)

* வரகிரோட்டகமாலைமாற்றேகபாதம் முதல்வளமிக்கபுரையில்
பாக்களேபுகன் றிடுபுலவர்கள்புவிமிசைபலர்வாழத்
தரமதொன் றிலேனலமில்புனுக்கொடுசாற்றுதலிப்பாவைத்
தரையில்வாழ்குநரனைவர்க்கும் பெருநகைதந்திடற் பொருட்டேயாம். (22)

---

* கண்டு, பிரம்மசூத்திரம் சாரரீகபாடியம், பஞ்சபாதிகை, விதரணம் தத்வதீபனம், பாமதி, கற்பதரு, பரிமளம், சித்தி, பிரமாணந்தீயம், பிரம வித்யாபரணம் முதல பல பிரௌட கிரந்தங்களிருக்க யான் இந்நூலைச்

## நூல்.

ஆரணம்புகன் றுசாதனநான்குமடைந்தசங்கரமுனியருளே
சீரணியாகத்தரித்திடுசேடாத்திரிசிவஞர்பதமிறைஞ்சிப்
பூரணகருணைவாரிதிநாயேன்புன்மையாம்பவக்கடல்புக்கு
மாரணமாகாவணமருளென் றுமலங்கிடமாதவனுரைப்பான். (23)

சங்கரசுத்தப்பிரமமாஞ்சருவசாக்கியினிடத்திலந்தழலிற்
றங்குறுவெம்மைமானவேறிலதாஞ்சத்தியொன் றுண்டந்தச்சத்தி
துங்கவதீதப்பிரமத்திலடங்கியிருக்குங்காற்சொல்சுத்தப்பிரம
மிங்கிதுவிசிரிம்பித் தந்தச்சுத்தப்பிரமத்தைவியாபிக்குமேல்வை. (24)

பரைவியாபகத்துள்ளிருந்ததினலே பரப்பிரமமாகுமப்பிரம
முறையிலக்கணஞ் சூனியமதாமிந்தச் சத்திக்கவ்வுயர் பிரமத்திருமுன்
கரையிலின்பரிவைதனக்குத்தன்கணவன் சந்நிதிதனிலுதித்தெனவி
கிருதமாகாத சத்துவ மிராஜசு தமமெனக்கிளைத்தமுக்குணமே (25)

இந்தச்சுத்தசத்துவத்தினுக்கெய்திடுபேரா
னந்தச்சத்தியா மிரசசிற்கெய்திடுநாமஞ்
சந்தச்சித்துருச்சத்தியாந் தமந்தனக்குப்பேர்
முந்தச்சத்தெனுஞ்சத்தியமொழிந்திடிற்றுனே. (26)

---

செய்தலெனை அவையடக்கங் கூறாது இவ்வாறு செய்யுள் சம்பந்தமாய்க் கூறிய தென்னையோவெனின், இந்நூல் சேடாத்திரி சிவஞான் முன்னமே வாக்கியரூபமாய்ச் செய்யப்பட்டிருந்ததாகலானும் பொருட் குரியரவரேயாகலானும் அதுபற்றி, யாமவையடக்கங்கூற லொல்லாதாகலானும் செய்யுள் யாத்ததொரு செய்கையே யெமதாகலானு மென்க.

இந்தக்காரணமா மானந்தரூபவிறைவியுடன் பரப்பிரமமிசைந்துசர்வா
னந்தமாசுழுத்தியடைகாலையிந்நாமம்போய்ப்பின்பரமானந்நாமம்
வந்ததிவன்சித்துருவச்சத்தியோடு மருவிசர்வப்பிரகாசமாங்கனவை [றுன்.
உந்தவடைகாலையிந்நாமந்தானுமொழிந்துதேசோமயனென்றொரு பேருற்
இவன்சத்துரூப சத்தியுடனியைந்திங் கியம்புசர்வ வியாபகமானவையெய்து
மவதரத்திலப்பெயர்போ யகண்டபூர்ணவபிதானம் வந்தநிந்தவகண்டபூர்ண
சிவசச்சிதானந்தப்பிரமந்தன்னிற்சிப்பியதிற்றோன் றுமிரசிதமேமானப் [டும்.
* பவமாயிற்றொருசத்தியதுதான் மூலப்பகுதியென விகிர்தகுணமூன்றனோ
இதன்சாத்துவிககுணத்தை மாயையென்று மெலாமறியுமுபாதியென்று மீச்சுரன்றன்
றிதன்காரணத்தனுவாமென்றுஞ் செப்புந்தெரிந்தவிந்தமாயைதனிற் றெளிவினீரிற்
பதிபிம்பமெனப்பிரமமழகதாகப்பதிபலிக்குமிதைச்சருவக்கியவீசனென்
மதியுடையர்பகர்வரிந்த மாயைதன்னின் வழுத்தியவம்முக்குணமும்வயங்கு
மாதோ. (29)

சாத்திகத்திற் சாத்தீகம் தலையெடுக்குந் தருணமதிற்பதிபலித்தவீசன்றலங்
காத்தலினாலரியென்றுகழறற்பாலன்கழறியவச்சத்துவத்திரசோகுணந்தான்
மூத்தபோதிற் பதிபிம்பித்தவீசன்முளரிவருபிரமனுமுன்சொன்ஞாலம்
பூத்ததாற் றமசெழும்போதிலை தோன்றும் புண்ணியவானுருத்திரனுஞ்
சங்காரத்தால். (30)

இப்படிமூலப்பகுதியின் சாத்துவிதகுணத்தினியல்பையெல்லாஞ்
செப்பினமாலினியிராசத குணந்தா னனேகமாய்த்திரிந்தவித்தை
யொப்பிரியுஞ் சீவகாரண மெய்யென் றுரைக்கலுறு மொண்மையோடு
செப்பமார்மனத்தவரீகேட்டியிவ் வவித்தைகளிற்றெளிவினீரில். (31)

---

* சிருட்டியோன்முககாலமே பவமாவது.

பதிபிம்பமெனப்பிரமசைதனியம்பதிபலிக்கும்பதிபிம்பங்கள்
மதியற்பரெனச்சீவசிதாபாசர்பிராஞ்ஞரெனவழுத்தற்பால
விதியிந்தவவித்தைகடம்மிடந்தனிலுமுக்குணமுமேவுமூன்றுண்
முதலெழும்பிலதிற்பதி பிம்பித்தசிதாபாசனாயர்முத்தனாவன். (32)

பகரிராசத மெனுமிவ்வவித்தையின் ராசதமெழுங்காற் பதிபலித்தோன்
மிகுகாமக்குரோதபாரனாய்க்கருமநிட்டனாம்மேன்மூன்றாக
வகுகுணமேலாம்பொழுது பதிபலித்தோன் சோம்புறக்கமயக்கஞ்சாருஞ்
சகமூலப்பகுதிராசதகுணகற்பனையின்மனை சாற்றினாமே. (33)

இனிமூலப்பகுதியின் றாமதகுணத்திற் கிரண்டுசத்தியிம்பிலுண்டா
நன்மூடல்விரிதலென வாவரணஞானியொடுமீசனன்றி
துணிமேவும்மனைச் சீவருக்கெலாமுடன் மூன்றுசொலுமாபாசன்
றனைமேவுசாகஙியபகுப்பறியவொட்டாமேமறைக்குஞ்சாற்றிற்றானே. (34)

இதனான்மறைபடுசீவன்னிருபானிருநான்கொன்றையுமொன்றாக
துதமாநானெனவபிமானிப்பணிவபிமானஞ்செறியகங்கார
மதமாம்யாப்பெனச்சமுசாரப்பந்தமாகுமெனவழுத்திடுவார்கள்
சிதமாமாகமதுடையான்விழிபடத்தீரும்துவிதுதீர்ந்தேதபின். (35)

இருபானொடுநவமாகுந்தத்துவத்தின்பேதந்தெரிகுதல்வீடா
மொருவாறுரைதரலாம்னாமூடறன்னுருவாஞ்சத்தியதன்செய்கை
தருவாமுறையினிவிரிவாஞ்சத்தியிற்சத்ததன்மாத்திரைவடிவான
பெருவானமுமதிற்பரிசதன்மாத்திரைப் பெயர்வாதமுமபிறந்தனமாதோ. ()

வாயுவினிடத்திருந்துவடிவதன்மாத்திரையான
தேயுவுமதினின்றும்மேதிகழுயிரசதன்மாத்திரைத்
தோயமுமதினின்றொல்லைச் சுகந்தமாத்திரையாமண்ணா
மாயினதிரிகுணத்தோடவைகளினாயின்சார்பால். (37)

இப்பஞ்சபூதங்கடாமபஞ்சீகிருதபூதமியறன்மாத்திரை
செப்பமுறசூக்குமமேதிரிகுணபூதப்பேர்சேர்ந்திடுமிவற்றிற்
றுப்பருந்துசூக்கதனுக்களுந்தூலபூதங்கடோன்றுநிற்கும்
தப்பறுமைம்பூதசத்துவகுணத்தின்சமட்டியகக்கரணத்தானே (38)

இந்தவகக்கரணத்திற் காயவஞ்சமியைந்ததற் கடையாளமிதுவும்விண்போ
லந்தமில்லாச்சத்தங்களனைத்தினுக்குமவகாசந்தந்துதரித்தலினலேயா [ற்சம்
மிந்தவிதந்தரிக்கின்றவிருத்திக்குப்பேரியம்பிடுவெருள்ளமெனவிதுபோற் கா
பந்தமதற்கறிகுறிதானிதுவுமந்தப்பவனம்போற்சலித்தலாம்பகருங்காலே. ()

இந்தமாதிரியலேயும் விருத்திக்குத்தானியம்புபெயர்மனமாகுமெழுநாவஞ்சம்
வந்ததற்கடையாளமிதுவும்வன்னிமானவிதுவின்னதெனவயக்கலேயாம்
புந்தியெனப்பகர்வரிவ்விருத்திக்குப்பேர்புனலஞ்சம் பொருந்தியதற்கடையா
ளந்தான்
பந்தமுறவிதுவுமப்பு மானத்தானேபகர்விடயங்களிவிழுக்கும் பான்மையே
யாம். (40)

வழுத்திந்தவிருத்திக்குச்சித்தமென்னவரும்பெயர் மண்ணஞ்சமதற்கடையா
ளந்தா, னழுத்தமாயிதுவுமண்போ னின்றுநானெனன்றபிமானஞ்செய்தலின
லாகுமிந்தக், கொழுத்தவபிமானஞ் செய்விருத்திக்குத்தான் குலவுபெயரகங்
காரமாகுமின்னு, முழுத்தபஞ்சபூத வெண்குணவியட்டிமொழிந்தசுரோத்
திர முதலிந்திரியமாமால். (41)

சோத்திரமாகாயவஞ்சமாதலாலேசூழ் விண்ணின்குணத்தொனியேதோன்ற
வோருங், காத்திரமார்ந்தேயிருக்குந் தொக்குங்காற்றின்கலேயாகு மதனற்
காற்குணமாமூறு, மாத்திரமேயறியுங்கண்வன்னியஞ்சமாதலினலதின்குண
மாம் வடிவமோரு, நாத்திரவமாமப்பினஞ்சமாகுநலத்தின லுணருமந்தச்
சுவையதொன்றே. (42)

ஆக்கமார்கிராணம்பூவஞ்சமாகு மாதலினலதன்குணமாங் கந்தமோரு, நீக்க மாயிருத்தலினலிந்தவைந்தும் நேராதுவொன்றுபிறி தின்குணத்தை, நோக் குரு தகக்காணமதனிலைந்து நுண்பூதமாத்திரையுமொன்ருகக்கூடி, ஆக்கமா யிருத்தலினலறியுமைந்திந்திரியங்கடம்மாலும்விடயமைந்தை. (43)

கரையுறுசத்துவகுணத்தில் வந்தவந்தக் கரணமைந்துஞானவிந்தியங்களைந்து ம்,புரையறுமக்குணத்தினஞ்சமாதலாலே புகன்ஞான சாதனமாம்பூதமைந்தி, னிரசதத்தின்சமட்டிபஞ்சவாயுவாகு மிதில்வியானனிடவஞ்சமாதலான்மா, திரமென்ன மெய்யெங்குமேவு மேலுஞ் செப்புவமாற் பிராணதிச் செய்கை தானே. (44)

பிராணன்ருன் காலஞ்சமாதலாலே பெருங்காற்றேபோலவிதயத்திருந்து, கிராணம் வரையலையுமபானன்ருன்வன்னிக் கிளையதனற் சாடராக்கினியே யாகப், பராவுகுதம்பற்றியுட்டனித்துண் டன்ன பானதிகளைப் பாகம்பணி யழிக்கும், விராவுசமானன்புனற்கூருதலாலே மெய்ந்நடுவொநாபித்தானத்தை [மேவி. (45)

உண்டவன்னபானதிகளை யப்பைப்போ லுளநாடியனைத்திலுமேயுறவிழுக் குங், கண்டமதைப்பற்றிநின்றுதானவாயுக் கடினமாக்கடையு மணின்கலையா மாற்ருல், விண்டவிவ்வைந்துவாயுக்களன்றி வேறேயுமைந்துவாயுக்கடாமு, முண்டெனவே சிலர் பகர்வரிந்தவைந்து முயர் பிராணன்ருெழிலாமுணரிற் ருனே. (46)

வழுத்தந்தவாயுக்கடம்மைக்கூறின் வாந்திபண்ணுவிப்போன்ரு ஞகனும், விழித்திமைக்கப்பண்ணுவோன்கூர்மனும்விரைந்தும்மற்கிரிகரனே விளை விப்போனுந், தழுதழுத்துக்கொட்டாவிசெய்வோன் றேவ தத்தனுந் தனஞ் சயனுந் தனுவைத்தானே, பழுத்தபழம்போல் வீங்கப்பணிப்போனிங்ஙன் பகர்ந்தவிவ்வைந்துமே பிராணன்ருனே. (47)

விண்முதலாம்பஞ்சபூதங்கடம்மின் விளங்குமிரசதக்கூற்றின் வியட்டியாகு
ம், பண்பொருவுவாக்காதியிந்தியங்கள் பகருமிந்தக் கருமவிந்தியங்களைந்தாள்,
விண்ணிடமாய் வசனிக்கும்வாக்குவாயு விடமாகப்பாணிமன்னிடுதலேற்றல்,
பண்ணுமனலிடமாகப் பாதஞ்செல்லும் பாயுவப்பினிடமாக விசர்க்கம்பண்
ணும். (48)

மண்ணிடமாய்க்கொண்டபேத்தஞ் சுகத்தைப் பண்ணும் வகுத்த விவ்வைந்து
மேவேறுவேரு, யுண்மையாலொன்றன் வினையொன்றுஞற்ற துரைத்தவி
யானன் முதலாமுல்வையைந்து, மண்மையாயிருத்தலிற் கன்மேந்தியங்க
ளைந்தன் வழியாலுமைந்துதொழிலுமாற்றும், பண்ணுதொழிற் சாதனமா
மிந்தப்பத்தும் பகரிராசதக்கூறும்பண்பினலே. (49)

அகக்கரணமைந்துஞானேந்தியங்க ளைந்துவாயுக்களைந்து தொழில்களாற்றுந்,
தகக்கரண மைந்துமிந்தவிருபதான தத்துவமுஞ் சூக்குமசற்றனுவதாகும்,
சகக்கரணமாயையினிற் பதிபலித்தோன் சாற்றிந்தச் சூக்கதனுத்தனையவித்
தை, தகக்கரணமாய்வந்த சீவர்க்கெல்லாந் தனித்தனியே யொவ்வொன்றுந்
[தந்தானன்றே. (50)

இன்னணஞ்சூக்கமெய் யியலியம்பினும்
அன்னமயம்மெனுந் தூலத்தாக்கமும்
பன்னுவங்கெடப் பாந்ததத்துவப்
பின்னலைப்பிரித்தலே பீடதாகுமால் (51)

எஞ்சியதாமதவஞ்சப்பூதமைந்தை யிவ்விரண்டாய்ப்பகுத்துமுதற்பாதியான
வஞ்சினையுநந்நான்காயாக்கினாலு மந்தந்தப்பாதிவிட்டயலாநாலாய்
விஞ்சுபூதங்கடமினைகளோடும் வேறரைக்காலரைக்காலாய்விரவஞனே
பஞ்சிகரணம் மெனவே பகாலாகும் பகரிவற்றிற்குணங்கணிற்கும் பண்பு
சொல்வாம். (52)

விளம்புபஞ்சீகாணஞ்செய் தூலபூத விணிற்பரிச ரூபாச கந்தமான
வளமில்குணநான்குமதில் வியாப்பியமான மாலையிஞற் காஞுமன்மறைந்து
நிற்க, வுளதனதுகுணமானவொலியும் வாயு வுள்ளுருவவிரசகந்த குணமோர்
மூன்றுங், குளமதனினீரென்ன வியாப்பியமாகுங் குணமதஞற் காஞுமன்
மறைந்துநிற்க. (53)

காரணமாங்குணமானவொலியும் பின்னர்க் காரியமாந் தன்குணமாய் பரிச
மும்மங், காரகனுமதிலிரசங்கந்தமாம்யு களகுணமும் வியாப்பியமாற் காஞு
தாகக், காரணமாங்குணமான சத்தமூறுங் கவின்றனது குணமான வடிவ
மும்பின், வாரியதின்மணம் வியாப்பியமதான மாலையிஞற் காஞுமன்மறை
ந்து நிற்க. (54)

மூலகுணமானவொலி பரிசரூப முந்தனதுகுணமான சுவையுமண்ணில்
வாலொலிநற்பரிச வுருவிரசகந்த மாங்குணமும் வயங்கிடுமெச்சூக்கபூதப், பாலி
ருந்து சூக்கதனுப்பவித்தவாபோற் பஞ்சிகிருதப்பூத மவற்றினின்றும்
தோலுதிரமாஞ் சஞ்சனுயுவத்தி தோய்மச்சையெனவாறு தத்துவம்மாய். ()

சராயுசமண்டசஞ் சுவேத சம்முற்பீசம் மானசதுர்பிறப்பாய்
விராவிகலோகம்மோடு பரலோகப்புத்தி யிருவகையுமீயும்
பராவுமானிடத்தனுவுததமச்சாதி பரலோகப்புத்திபாழாய்த்
தராதலமாமிகலோகப் புத்திமாத்திரமடையுந்தன்மை வாய்ந்த (56)

விலங்குடனே பறவைமுதலானவை மத்திமச்சாதி விளம்பிரண்டு
தலங்கிளர்புத்தியையுமறந்திருக்கின்ற தாவரங்கடாழ்ந்தசாதி
இலங்கிந்தப்படி பதிவிதத்துவமாம் பூவுலக மிடைக்கண்டென்ன
சலங்கனல்கால் காயமெனுந் தத்துவங்களான நிரைநிரையாய்நிற்கும். (57)

பிதிருலகமொடு தெய்வவுலகியக்கர் பிறங்குகந்தருவருலகோங்சித்தர்
பதியிவைகடமிலு முடிவடிவாய்த் தோன்றும் பான்மதியே முதலானபிதிரர்
பாஞு, முதலவாங்தேவர்கள்சித்தர் மொழிந்தவுத்தமச்சாதிகாமதேனு, மதவயி
ராவத மன்னங்கருடன் மத்திமச்சாதி யதமங்கற்பகமேயாதி. (58)

எனமூன்று வகையான சாதியாகியிருக்கின்ற தூலதனு வெழுந்ததிந்தத் தனுவன்னமயகோசஞ் சூக்கதேகந் தானுமொரு முக்கோசமாகுஞ்சாற்றிற், கனமானபிராணன் கன்மேந்திரியங்கள் கலந்திருத்தல்பிராணமய கோசமாகும், மனஞான விந்தியங்கள் மருவுறுனே மனோமயங்கோசமாம் வழுத்துங் காலே. (59)

புத்திஞானேந்தியங்கள் புல்லறுனேபுகரில் விஞ்ஞானம்மயமாங்கோசங்கார, ணத்தனுவானந்த மயகோசமாகு நவின்றனமா லிவ்வாறு பஞ்சகோசம், தத்துவமாறுயிருக்குந் தூலமெய்யிற் றசமிரட்டித்தத்துவநுண் மெய்தானிற்ற, லெத்திறனுலெனில் விரிவாயியம்புகின்றோம் எகாக்கிரமனத்தனயிதனைக் கேட்பாய். (60)

வாக்குச்சிங்குவையிரண்டும் வாயின்மேவும் வாழுமுதானன்மனமுங் கண்டந் தன்னில், போக்குவரவுடைய பிராணக்கால் புந்தி பொருந்து மிதயஞ் சமானக்கால் சித்தந், தேக்குநாபித்தானந் தனிலபானன் பாயுருவுந் திரமான குதத்தைச்சேருந், தோக்குமகங்காரமுடன் வியானவாயுந் தூலமெலாங் கலந்திருக்குஞ் சொல்லிற்றுனே. (61)

உச்சிதனிலேயுளமுங் கருவிழியினுநிய தனி லொளிருங் கண்ணு
மெச்சுசெவியதிற் சுரோத்திரநாசியதிற் கிராணமேவுமப்பா
இச்சைவளருபத்தம் பாதம்பாணிக்கிடங்குய்யமியங்குகால்கை
இச்சடமாந் தூலதனுத் தத்துவங்களாறுமிதிலிருப்பவான. (62)

சூக்கதனுத்தத்துவங்களிருபானுஞ் சூழ்விண்ணேமுதலைம்பூதத்
தாக்கியகாரியமானவகையினுற் காரியமாமாகமென்பர்
சாக்கிரத்திற்சீவன் காரணவாகத்தோடு மிந்ததத்வத்தோடும்
வீக்கமுறவிருக்குங்கால் விசுவனென்றும் விவகாரச்சீவனென்றும். (63)

சொல்லுறுமாற்சொப்பனத்திற் றூலதனுத் தனைவிட்டுச் சூக்கதேகத்
தலமதனி லகக்காரணத்துடன் கூடிந்தருணாங் தைசசஞமென்று
நலபிராதிபாசிகச் சீவன்கனவு கற்பிதனென னவிலலாங்கே
வலசுழுத்தி தனிற்றூல சூக்கம்விட்டுக் காரணத்தை மருவும்வேலை (64)

பிராஞ்ஞனெனப் பாரமார்த்திகச் சீவனெனப்பகர்வர் பிரமந்தானும்
விராவுசாக்கிரங்கனவு சுழுத்திகளிற் சரியாகி விளங்கும் வேலை
பராவுபெயர் நிரலே சீவான்மா வந்தரவான்மா பரமவான்மா
நிராலம்பமாகி யவத்தாத்திரய சாக்கியாய் நிற்குநேரம். (65)

ஞானவான்மா வென்னக்கூடத்தரென நாமம்நவிலலாகு
மானவா சீவனுக்குமுத்தனுவு மவத்தையொரு மூன்றுஞ்சொன்ஞ
மேனமாலுரைப்ப தீச்சுரனுக்கு மெய்ம்மூன்று மவத்தைமூன்றும்,
தானதேதெனிற் றூலபூத மைந்துமதில் வருமுச் சாதியான. (66)

தூலசரீரச் சமட்டியுங்கூடி யீசுரற்குத் தூலமென்றும்
மேலபிதானம் விராட்டென்னவுமே விளம்பலுறு மேவியிஃதோ
டேலநன வெய்தீசன் வைச்சுவானரனென்று மிரண்டினுக்குஞ்
சாலவதிட்டான சைதனியமது பிரமனென்றுஞ் சாற்றலாகும். (67)

சூக்குமபூதங்களைந்துமதிற்றோன்று சூக்கதனுத்தொகுதி தொக்கு
சூக்கமெய் யீச்சுரர்க்காம் பொன்கர்ப்பனென்னவுமே சொல்லலாகு
நீக்கமிலாதிதைக் கூடிக் கனவதனினிலவீசன் சூத்திரான்மா
ஆக்குமிவ்வருவகைக்கு மதிட்டான சைதனியமரியென்றோதும். (68)

இத்தூல சூக்குமமா மிருவகை வாதனையுடனே யியைந்தமாயை
அத்தேவன் காரணமெய் யவ்வியாகிருதமென வறையலாகும்
இத்தோடே யியைந்துறக்க மருவீசனியம்பலுறு மந்தர்யாமி
யொத்தவிவ்விருவகைக்கு மதிட்டான முருத்திரனென்றுரைப்பர்மேலோர்.

சீவன் றனவத்தை யொருமூன் றிலுந்தன் றேகமாய்ச்செப்புகின்ற
மூவொன்பாஞமந்தத் தத்துவங்களுடனென் முயங்கிநிற்கும்
பாவனைபோ லீசனுந்தன்ஞகமொரு மூன்றுமுப் பத்திரண்டா
மேவுதத்துவங்களொடு மவத்தையொரு மூன்றிலுமே மேவி நிற்பான் (70)

ஆகையாற்சீவன் றஞகமாத்திரமணைந்தங்கவிர்வனீசன்
ஏகமாய்த் தனதாகமாஞ் சருவமெய்பவஞ்சத் தியைந்துநிற்பான்
ஆகுமிவ்விருவகைக்கும் கரியான பிரமமோவனைத்தாஞ்சீவர்
தேகமொடு பவஞ்சமெலா நிறைந்தப்பா லெல்லையற்றுத் திகழுமன்றே. ()

சீவனுக்குத் தூலதனு விவகாரக்கனமாய்ததிகழுமாறு
மேவுநண்டனுவிரு பான்றத்துவமுஞ் சீவேச ரவித்தை வித்தை
கேவலநற் பிரமமெனத் தத்துவமுப்பா ஞென்றுங் கிளருஞ்சூக்கத்
தேவலுறு விவகாரக் கிருபானைந்தாந் தூலமிரு மூன்றின்றே. (72)

புகன்றவிரு பானைந்தாந் தத்துவங்க ளிடைச்சூக்கமிருபான்போக்கி
மிருந்தவைந்துங் காரணமெய் விவகாரதத்துவமா மெய்போற் றோன்றும்
தருசீவவிவகாரந்தனக்க வித்தை வித்தை யிவைதள்ளிமூன்று
நகுஞ்சாக்கி விவகாரந்தனக்குமே சாக்கியொன் றுநவிலுங்காலே. (73)

இத்தத்துவங் கடமின் சமட்டியே யீச்சுரர்க்காமெனினுமுன்னர்
வைத்திடு தூலஞ் சூக்கமதிற் பூதமைந்து முடன்மருவுமீசன்
வித்தையொடு பிரமமெனக் காரணக்குமூன் றீச வியவகாரக்கு
மெத்தீசன் பிரமமென விரண்டாகும் பிரமமொன் றவ்விவகாரக்கே. (74)

இந்திரிய விவகாரக்கிந்திரியமொன் று சட்கோசமாறு
மந்தரிந்திரியமெனுங் கரணமோரைந்துடனே வாயுவைந்து
முந்தவுரை சீவேசாவித்தைவித்தை பிரமமெனமுறையே யைந்து
மிந்தவிருபானிரண்டா மஞேவியாச்சிய மதற்கு மியம்புவோமே. (75)

அகக்கரணமைந்தோடு சீவேச ரவித்தை வித்தை பிரமமைந்தாத்
தொகுத்த வீரைந்தாகு மிப்படியே தத்துவத்தின் றேற்றமோடு
வகுத்தனமா லதனிலையுமினியதன்ற ைெடுக்கமதை வழுத்துவா நீ
செகுத்தமயலுடையோனாய் சிரத்தையொடுஞ் சிரவணத்தைச்செய்குவாயே

எந்தவாறொடுங்கு மெனினெலாச் சீவரிடத்தினிலு மிருப்பதான
வந்தமிலாத் தூலதனுவத்தனையு மவைகளுக்காதாரமாகு
மைந்துவிதமாந் தூலபூதங்களிடை யமைந்தவ்வடிவமாகு
மிந்தவைந்து தூலபூதங்களும் பஞ்சீகரண மிகந்துபின்னர். (77)

தன்மாத்திரைத் தாமதகுணபூதங்களாந் தருணஞ்சுத்த
பொன்கர்ப்பவவத்தையெனப்புகலலுறுஞ் சூக்கமெய்ப்புணர்ப்புநீங்கி
மின்சாத்து விகவிரசோகுணமாகவிலயமுறும் விளம்பிற்றூனே
பன்சீவரிடந்தனில்வா ழகங்காரங்கிராணமுதானன்னுபத்தம். (78)

இந்நான்கும் பதிவியிலுஞ்சித்தநாவியம்புசமானன்றூன்பாயு
வந்நான்கு மப்பதிலும் புத்திசக்கபானன்காலனலிலும்மேற்
சொன்னான்கு மநந்தொக்குப் பிராணன்கைவாயு விலுந்துலங்குமுள்ள
மின்னாங்கில் சோத்திரம் வியானன் வாக்கந்தரத்துமிலயமாமால். (79)

அப்போது முன்போலவனைத்து முக்குணப்பூதமாகுநொய்ய
இப்பூதங்களுமேதான் பதிவியப்பிற் கரைந்தப்பு மெழுநாத்தன்னில்
வெப்பாலேசுவறியு மவ்வனல்விளக்கேயெனக்காற்றில் விழிந்துங்காற்று
மப்பாலாம்வெளிதனிலும் வெளியதுவிக்கேபத்துமடங்குமன்றே. (80)

ஆவரணம் விக்கேபமெனு மிரண்டுமால மரமதன் வித்துள்ளே
ஆவவடங்கிடல்போன் மூலப்பகுதி தமகுணமாத்திரமே யாகி
மேவுமொரு சிருட்டிக்கு வித்தாமாயை யவித்தை மீதிவைதாம்
ஓவுமூலப்பகுதியெயனும் விந்துதத்துவமாமுண்மைதன்னில் (81)

அவ்விந்து தத்துவமுமாவெனுப்பேர்போய்ச்சபிறேயானவாபோ,லெவ்வமிற
ன் னதிட்டானப் பிரமசைதன்னியமா யிலங்குமிவ்வா, றவ்வளவுபொய்யு
மொரேமெய்ப்பொருளென் றறிந்ததுவே யியல்பாய் மெய்யாந், திவ்விய
தன்வடிவமெனத் தெளிந்தகிலகவலை கெட்டோன் சீவன்முத்தன். (82)

இன்னணந்தத்துவங்கடமினிலயமதையியம்பிஞமிங்ஙன் றோன்றி
மின்னென்ன வடங்குந்தத்துவநாலொன்பது விளம்பிற்பூதமைந்து
மன்னமயகோசமாறைந்நான்கு சூக்கமெய்யவித்தை வித்தை
யென்னவிரண்டிதிற்றோன்றுசீவேச ரிரண்டிவைகட் கிறைதாஞென்றே.

பேசிந்தமுப்பாஞறதிற் பூதமைந்து வித்தை பிரதிபிம்ப
வீசஞெடு பிரமமென விவ்வெட்டும் பொதுவாக வெல்லாரானு
நேசமுற வநுபவிக்கலாகு மற்றைநாலேழு நீக்கமாகப்
பாசமுறவநுபவிக்கப்படுமெங்ஙனெனக்கேட்கிற்பகருவோமே. (84)

பதிவிதத்துவமொன்று பாழாகிலெவர்கட்கும் பதியோவில்லை
நிதிபுரைடமழை யிறக்கினீரில்லை நெருப்பிறக்கிற் பாகமில்லை
கதிகரு நல்லுயிர்ப்பில்லைக்காலிலாக் காற்காயமின்றேல் யார்க்கு
மதிதிரிதற்கவகாசமிலைமாயை யீசனின்றேன் மதத்தேவில்லை. (85)

ஓகைநிறைபிரமந்தானில்லையெனிலொருவருக்குமுணர்விங்கில்லை
யாகையாலிவ்வெட்டு மெல்லார்க்குஞ் சமுதாயமாகுமுன்னர்ப்
பாகமாநாலெழன் றுரைத்ததெவனெனிற்றாலம்பாழேயாகி
லேகனுக்கிங்கனைவருக்குமிறவாமையாலுமினுமிசைப்பக்கேளாய் (86)

சூக்கதேகத் தொருவர்க்கேதேனும் குறைவந்தாற் சொச்சப்பேர்க்கு
மாக்கமதுகுறையாமையானு நன்முத்தராயவிரா நின்ற
மாக்கருணைச்சுகவாமதேவாதிகட்கவித்தைசீவன்மாய்ந்தப்
பாக்கியமிங்கெவர்க்குமிலாப்படியாலுமிவ்வாறுபகர்ந்தாமன்றே, (87)

சாற்றுமி நாலொன்பதாந் தத்துவங்கடம்மௌன்றுந் தானுய்க்காணு, மேற்ற
மாந்தத்துவமொன்றேழ்வேருக்காண்டவிவ்விரண்டாய்க்காணுஞ், சீற்றமார்
தத்துவநாலேழெங்ஙனெனினவத்தாத்திரயசாக்கி, போற்றுமெலாவவத்தை
யிலுந்தானுகப்பொலிந்தனியம்போலாதானும். (88)

பிரமமொன்றேதாஞகும் பேசுபூதங்களைந்து மாயைமாயாப்
பிரதிபிம்பனெனு மீசனிவையேழின்ஞுழிலதனைப்பேதையாலும்
திரமுறத்தன்ஞுழிலாகச்சிந்தித்தலிலையதனல்வேருந்தற்கிங்
கிருபதிஞேடிருநான்கு தத்துவத்தினியறனையுமியம்பக்கேளாய். (89)

வேதியனுன்வேந்தனுன் வைசியனுன் சூத்திரனுன் வேதமெல்லா
மோதியுணர்ந்திடுபிரமசாரிநானில்லானுனுலவையப்புத்
தாதிலைகளுண்டுவனத்திருப்பவனுன் நான்றுறவி நானுண்பெண்ணுன்
கோதிலாச்சேயனுன் கரியனுனெடியனுன்குறியனுனே. (90)

நான்பருத்தே ஞுநிளைத்தேனெனத்தானுய் நாடிடுமிந் நலமின்மெய்யை
மானெனது மனையெனது வென்ருற்போலெனதுமெய்வாடிற்றின்று
வான்மருவுமாறுமிக வளர்ப்பனியானென்னவேமற்ருரேல்வை
தான்வேறு தூலம்வேறெனக்கண்டபடியாலுஞ்சக்குவாதி. (91)

தத்துவங்கடனையொருகால்யான் கண்டேன்யான் கேட்டேன் றந்தேஞுதி
யித்தகையவநுபவத்தாற்ருஞயுமொருவேளையென்கண்கைகால்
புத்தியகங்காரமெனத் தனக்கனியமாகவுமே புகறலானுஞ்
சித்தமிந்நாலேழாகுந் தத்துவமுமிருவகையாச் செப்புமாறே. (92)

இன்பமிங்கெனக் களிக்குமாவெழுந்தருளிறைவ விவ்விருபத்தெட்
டென்பதான தத்துவங்களுந்தானெனிலென்றுமோர்படித்தாகி
மன்பெறுங்கரிபோலவேவயங்கிடவேண்டுமஃதல்லான்மற்
றென்பெரும்பஞ்சபூதம்போலனியமாயிலங்கிடுமியருனே. (93)

அன்றியன்னியமாயிடனனவரதமும்புறமாய்த்தானே
நின்றிலங்கிடவேண்டுந்தானென்னவே நிகழ்ந்திட நெறியின்றே
தன்றனக்கனியம்மெனத்தானெனச்சாற்றுதறமப்பானு
வென்றல்போலும் வேளாளவேதியனென விளம்பல்போனிழுக்காமால் ()

மைந்தகேட்டி நீயுண்மையாத்தானென லொருவகை மயக்கத்தாற்
புந்திசோர்ந்துதானெனலொருவகையெனப்புகலினிவ்விரண்டுண்டாம்
சந்தமார்கரிதானென லுண்மையேதப்பலவிருபத்தெண்
பந்தமாகு தத்துவங்களைத் தானெனப்பகர்ந்திடன்மயக்கேயாம். (95)

எந்தவாறெனிற்ருணுவைச்சோரனென்றிரச்சுவைப்பணியென்று
மைந்தராயிழையிவர்களைத்தானென்று வழங்கிடுமருள்போலாம்
பந்தநீத்தவவாதலாற் பண்டையஞ்ஞானகாலந்தொட்டிங்
கிந்தநாள்வரைதானெனவியம்பிடாதியலுவ தத்துவமேழும். (96)

ஞானம்வந்தபின் றானெனக்கருதிடாநலமிறத்துவநாலே
ழானமுப்பதினைந்து தத்துவங்களு மறைகுணங்குறிகொண்டு
தானறிந்திடுமறிவுகாண்பவன் கடந்தனக்குத்தான்வேறு தன்
மானவேறென்றுமம்முப்பானுறதாவயங்குதத்துவந்தானே (97)

எங்குமாயொளிர்பரசிவமென்று மப்பரசிவந்தானென்றுஞ்
செங்கையாமலகம்மெனமனத்திடைத்திடமதாய்த்தெளிந்தோனே
துங்கமாஞ்சிவதரிசனமுடையனுந் தூகளில்சீவன்முத்தன்
சங்கையன்றிதிற்சத்தியமெனவருமறைகள்சாற்றிடுந்தானே. (98)

இந்தவாறந்தப்பிரமமேதானென்றுமிதாமாமுப்பானே
டைந்துதத்துவமுந்தனக்கன்னியமாகவுமறியாதார்
புந்தியென்னவாகங்கிரந்தியாற்புத்திராதாராதி
வெந்துநோவதைத்தனக்குற்றநோவெனவிளம்பிடுமடம்போல. (99)

முன்னமுரை யிருபத்தெண்டத்துவங்கண் முயன்றுசெயுந்தொழிலெல்லாந் தனதாய்முன்னி, யின்னலுறமயங்குகின்றபடியாலென்று மிவைகளாலீட்டு மிருவினைகளாலும், பின்னலுறக்கட்டுண்டக்கருமவாற்ருற் பிறப்பிறப்பாம் பெருங்கடலிற்பிறழுகின்றே, னென்னமயங்குவனந்தோவிந்தமைய விரித் தவவனிருக்குமியலியம்பக்கேளாய். (100)

மன்பிரமசைதன்யமே தானென்று மற்றைமுப்பானேந்துந் தானல்லவென் றும், தென்பெறுநற்றெளிவுடையவவற்குச் செப்புமகங்காரக் கிரந்தியது சிதைந்ததாலும், பண்பதினுன்கிரட்டித் தத்துவங்கள் பண்ணும்பணியையுந் தான்பண்ணவில்லை யென்றுமின்னுந் தின்பதனையான் றின்னவில்லையெ ன்றுந் திடமதாய்த்தெளிந்துமயல்சிதைந்ததாலும். (101)

இவைகளீட்டிருவினையினீங்கிச் சென்மமிறப்பின்றி முத்தனுய்ப்பிரமமாகி, யவிருவானிவினை யருமறைகளெல்லா மதிவருணன்சீவன் முத்தன்பகவற் பத்தன், தவறில்லாத் திடபிரஞன் பிராமணன்னேதகு குணதீதனெனச் சாற்றுநீயும், உவமையிலுன்பரவடிவமுணர்ந்தானந்த வுததியாகென வுரைத் தானுவனுமானுன். (102)

சங்கரபகவற்பாதத்தயாநிதி
புங்கவப்பதமலர்புனைந்தென்பொன்முடி
துங்கசேடாத்திரிசிவன்முன்சொல்லிய
மங்கலமொழியினைப்பாவில்வைத்தனன். (103)

அத்திருச்சங்கரப்பகவற்பாதனுர்
மெய்த்திருவருளுறில்விளம்பிநூலதே
முத்தியைத்தருமதிங்கில்லையேன்மொழி
எத்திருநூல்களுமென்னியற்றுமே. (104)

சுகமதாய்மனந்துன்னத்தொடர்பின்யாம்
புகலிந்நூறனைப்புந்திசெய்புண்ணியர்
சகலரும்முத்திசார்குகசங்கரப்
பகவற்பாதன்பதமலர்வாழியே. (105)

## நாஞ்சீவவாதக்கட்டளைச்செய்யுள்

முற்றிற்று.